# தமிழ்நாடு, புதுச்சேரி அஞ்சல் குறியீட்டு எண்கள்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அஞ்சல் குறியீட்டு எண்களின் தொகுப்பாகும் இந்தப் புத்தகம். ஒவ்வொரு அஞ்சல் குறியீட்டு எண்ணுக்கும் உரிய பகுதி மட்டுமல்லாது, அனைத்து பகுதிகளும் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக 641 045 என்ற எண் கோயம்புத்தூரில் மூன்று பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், புலியகுளம் மற்றும் கிருஷ்ணசாமி நகர் என்ற அந்த மூன்று பகுதிகளின் பெயரும் அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் தொகுக்கப்பட்டுள்ளன.

அந்தந்தப் பகுதிகளின் பெயர், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன், அவை உள்ள மாவட்டத்தின் பெயரும் தரப்பட்டுள்ளதே இந்த நூலின் சிறப்பு அம்சமாகும். இதனால் ஒரே பெயரில் உள்ள இடத்தை சரியாக அறிந்த கொள்ளலாம். எடுத்துக்காட்டாக வடுகப்பட்டி என்ற ஒரே பெயரில், மதுரை, ஈரோடு, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தனித்தனி ஊர்கள் உள்ளன. பெயர் ஒன்றாக இருந்தாலும் இவற்றிற்கான அஞ்சல் குறியீட்டு எண் வெவ்வேறாக உள்ளது.

இரு மாநிலங்கள் மட்டுமல்லாது. இந்தியாவின் முதன்மையான நகரங்களுக்கான அஞ்சல் குறியீட்டு எண்களும் இதே வகையில் மாநிலத்தின் பெயருடன் நான்கு பக்கங்களுக்குத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த புத்தகத்தில் மொத்தம் 96 பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தின் அளவு டெமி 1/8 (உயரம் : 21.5 செமீ; அகலம் : 13.5 செமீ) ஆகும்.

இது ஒரு எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு.

ஐஎஸ்பிஎன் : 978-93-80324-17-3